**கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் - 2025**

**-----------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களானது 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவனத்தை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் நிறுவனத்தை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட:டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகள் என்பவற்றை வெளிப்படுத்துதல் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவனத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிறுவனத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது˙ நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதாக,

- நிறுவனம் தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக,

- நிறுவனத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள்˙ | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20 இன் 118 ஆம் பந்தியின் பிரகாரம் கட்புலனாகா சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் தனியாக ஒரு சொத்துக்கள் தொகுதியாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணப்பட்ட ரூபா 3,142,674 கிரயமான கட்புலனாகா சொத்துக்கள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20 இன் 118 ஆம் பந்தியின் பிரகாரம் கட்புலனாகா சொத்துக்களாக அடையாளங்காணப்பட வேண்டிய ரூபா 3,142,674 ஆன கணனி மென்பொருட்கள் ஐந்தொகையில் தனியாக கட்புலனாகா சொத்துக்கள் தொகுதியின் கீழ் சமர்ப்பிக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20 இன் 118 ஆம் பந்தியின் பிரகாரம் கட்புலனாகா சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் தனியான ஒரு தொகுதியாக அடையாளங் |

| | | | |
|---|---|---|---|
| | | | காணப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்திற்குச் சொந்தமான பயிர்ச் செய்கை காணிகளில் காணப்படுகின்ற 310 விளைச்சல் தருகின்ற மற்றும் நாற்று தென்னை மரங்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இன் 13 ஆம் பந்தியின் பிரகாரம் அடையாளம் கண்டு கணக்கீடு செய்யப்படாமையால் அந்த உயிரியல் சொத்துக்களின் பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. | தென்னை மரங்களை கணிப்பீடு செய்து அதன் பெறுமதி பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இன் 13 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இன் 13 ஆம் பந்தியின் பிரகாரம் உயிரியல் சொத்துக்களை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இன் 13 ஆம் பந்தி மற்றும் நியமம் இலக்கம் 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் பயிர்ச் செய்கை காணிகளில் காணப்படுகின்ற விளைச்சல் தருகின்ற 248 தென்னை மரங்களை அடையாளங்கண்டு பெறுமானத் தேய்வு செய்ய வேண்டிய போதிலும் அத்தென்னை மரங்களுக்கான பெறுமானத் தேய்வு செலவுகள் கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இலங்கை பொத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இன் பிரகாரம் உயிரியல் சொத்தக்களின் (தென்னை மரங்கள்) மதிப்பீட்டுப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும் போது அது தொடர்பான பெறுமானத் தேய்வு விகிதங்களை தீர்மானித்து பெறுமானத் தேய்வு செலவுகள் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் கணக்கீடு செய்யப்படும். | உரிய கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தென்னை மரங்களின் பெறுமானத் தேய்வு செலவுகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிறுவனத்தினால் அறவிட முடியாக் கடனுக்கு ஒதுக்கீடு செய்வதற்காக முறையான ஒரு கொள்கை ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் கடன்பட்டோர் மீதியின் காலப்பகுப்பாய்வு மற்றும் கடனை அறவீடு செய்யும் இயலுமையினை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 18,670,299 வணிகக் கடன்பட்டோர் மீதிகளின் அடிப்படையில் பொதுவாக | 2026 ஆம் ஆண்டிலிருந்து அறவிட முடியா கடனுக்கு ஒதுக்கீடு செய்தல் மேற்கொள்ளப்படும். | கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்யும் இயலுமையினை மதிப்பீடு செய்து அதற்கிணங்க அறவிட முடியா கடனுக்கு ஒதுக்கீடு செய்தல் வேண்டும். |

05 சதவீதமாக ரூபா 933,515 அறவிட முடியாக் கடனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 06 மாதங்களுக்கு குறைந்த மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதிகளுக்காவும் ஒரே விகிதத்தில் அறவிட முடியா கடனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமைக் கூற்றில் முன்னைய ஆண்டின் மற்றும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான நடைமுறைச் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி முறையே 22,024,539 மற்றும் ரூபா 24,164,076 ஆல் அதிகரித்தும் நடைமுறையற்ற சொத்துக்களின் மொத்த பெறுமதி முறையே ரூபா 22,024,539 மற்றும் ரூபா 24,164,076 ஆல் குறைத்தும் காட்டபட்டிருந்தது. | 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் நடைமுறை மற்றும் நடைமுறையற்ற சொத்துக்கள் முறையே ரூபா 22,024,539 மற்றும் ரூபா 24,164,076 ஆக மொத்தப் பெறுமதிகள் தவறுகளுடன் அச்சிடப்பட்டிருத்தல் 2026 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | நிதிக் கூற்றுக்களில் வரிசை விடயங்களின் மொத்த பெறுமதி சரியாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் உடன்படிக்கை செய்யப்பட்ட 05 நிர்மாண ஒப்பந்தங்கள் மற்றும் 2026 ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்யப்பட்ட 02 நிர்மாண ஒப்பந்தங்களுக்காக முழு மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 9,239,151 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அட்டுறுவாக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் கணக்கிற்கு வரவு வைத்ததன் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகள் (Work in Progress) மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 9,239,151 வீதம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | அடுத்துவரும் நிதி ஆண்டுகளின் போது பொறியியலாளர் சான்று படுத்திய விலைப்பட்டியல்களின் பெறுமதியை பெற்றதன் பின்னர் அப்பெறுமதியினை அட்டுறுவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறியியலாளரின் சான்றுதலின் அடிப்படையில் உறுதிப்படுத்திய வேலைப் பெறுமதிகள் மாத்திரம் அட்டுறுவாக்கப்பட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகள் கணக்கில் (Work in Progress) காணப்பட்ட ரூபா 11,949,954 மீதி நிதி நிலைமை கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் | நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகள் (Work in Progress) நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்படும். | நிர்மாண வேலைகளின் கீழ் காணப்படுகின்ற நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகளை நடைமுறையற்ற சொத்துக்களாக |

| | | | |
|---|---|---|---|
| | கீழ் காட்டப்பட்டிருந்ததனால் அப்பெறுமதியால் நடைமுறைச் சொத்துக்கள் அதிகரித்தும் நடைமுறையற்ற சொத்துக்கள் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | | சரியாக வகைப்படுத்தி அறிக்கையிடுதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் கொழும்பு அலுவலக கட்டிடத்தினை மீள்மதிப்புச் செய்து அதன் புதிய மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த புதிய மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் வருடாந்த பெறுமானத் தேய்வினை கணிப்பீடு செய்யும் போது கட்டிடத்தின் எஞ்சிய வினைத்திறனான ஆயுள் காலத்திற்குப் பதிலாக ஒட்டு மொத்த வினைத்திறன் ஆயுட்காலம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வு ரூபா 360,044 இனால் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான கட்டிடங்களின் தேறிய புத்தகப் பெறுமதி அப்பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | மீள்மதிப்புச் செய்யப்பட்ட கொழும்பு அலுவலக கட்டிடத்தின் பெறுமானத் தேய்வுப் பெறுமதியை எஞ்சியுள்ள வினைத்திற்னான ஆயுட் காலத்தினை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீள்மதிப்புச் செய்யப்பட்ட கட்டிடத்தின் பெறுமானத் தேய்வினை எஞ்சியுள்ள வினைத்திறனான ஆயுள்காலத்தினை அடிப்படையாகக் கொண்டு சரியாக கணிப்பீடு செய்து அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் உரிய கணக்கு மீதிகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுகின்ற 207.363 ஹெக்டயர் அளவிலான 03 காணித்துண்டுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்காததனால் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் பயன்படுத்துகின்ற போதிலும் உரிமை தொடர்பான பிரச்சினைகள் காணப்படுகின்ற உடவளவ தெனியாய, சியம்பலாண்டுவ ஆகிய நிலையங்களின் காணிகளின் பெறுமதியும் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் வரையறைகளுக்கு இணங்க ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஊ) | நிறுவனத்தின் நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 10,932,946 தொகையான நிலையான சொத்துக்கள் மீது மீளாய்வாண்டு தொடர்பாக கணிப்பீடு செய்யப்பட்ட ரூபா 574,271 பெறுமானத் தேய்வு மூலதன வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் | இந்த மூலதன வருமானம் மற்றும் செலவுகள் ஆண்டிற்கான மூலதன வருமானம் மற்றும் செலவுகளாக கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிழையாக அடையாளம் காணப்பட்ட மீண்டு வரும் வருமானத்தின் தாக்கத்தினை உரிய கணக்குகளிலிருந்து நீக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை மற்றும் பிற்போட்ட வருமானம் ரூபா 574,271 வீதம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (எ) | மீளாய்வாண்டில் செலவு செய்யப்படாது திறைசேரிக்கு மீள அனுப்பிவைக்கப்பட்டிருந்த ரூபா 12,905,803 மூலதன மானியம் நிதிக்கூற்றுக்களில் பிற்போட்ட வருமானமாக காட்டப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பிற்போட்ட வருமானங்கள் அப்பெறுமதியால் அதிகரித்தும் பொறுப்புக்கள் அப்பெறுமதியால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | பொதுத் திறைசேரிக்கு மீள அனுப்பப்பட்ட ரூபா 12,905,803 மூலதனப் பணத்தை பிற்போட்ட வருமானத்தின் கீழ் அறிக்கையிடப்பட்டிருக்கும் தவறு சரிசெய்யப்படும். | திறைசேரிக்கு திருப்பி அனுப்பிய மூலதன மானியத்தினை சரியான கணக்குகளின் கீழ் காட்டி நிதிக்கூற்றுக்கள் சரிசெய்யப்படுதல் வேண்டும். |
| (ஏ) | மீண்டுவரும் செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 313,220,747 பணத்தில் மீளாய்வாண்டில் செலவு செய்யப்படாது மிகுதியாக திறைசேரிக்கு அனுப்பிவைத்த ரூபா 13,902,891 இனை ஒரு வருமானமாக கணக்கீடு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறையும் பொறுப்புக்களும் அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ஆண்டில் செலவு செய்வதற்கு முடியாதிருந்த ரூபா 13,902,891 பணம் 2026 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்தில் மீண்டும் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் அப்பணத்தை ஆண்டின் ஒரு வருமானமாக பதிவு செய்த தவறு சரி செய்யப்படும். | பிழையாக அடையாளம் காணப்பட்ட வருமானத்தை கணக்குகளிலிருந்து நீக்கி மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை மற்றும் பொறுப்புக்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு பாதுகாப்புச் சேவைகளை வழங்குகின்ற இரண்டு நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,227,328 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்காததன் காரணமாக ஆண்டிற்கான பற்றாக்குறையும் நடைமுறைப் பொறுப்புக்களும் அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | பாதுகாப்பு சேவைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 3,227,328 பணம் நடைமுறைப் பொறுப்புக்களாக காட்டப்படாத தவறு சரிசெய்யப்படும். | செலுத்த வேண்டிய செலவுகளை அடையாளம் கண்டு தாக்கத்திற்கு உள்ளாகிய கணக்கு மீதிகளை சரிசெய்தல் வேண்டும்.. |
| (ஒ) | மீளாய்வாண்டிற்கான ஊழியர் பணிக்கொடை செலவுகள் ரூபா 35,967,987 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதியில் ரூபா 34,585,689 இனை முன்னைய ஆண்டு பற்றாக்குறைக்கு செம்மையாக்கியதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான | முன்னைய ஆண்டு தொடர்பாக அதிகரித்த ரூபா 32,370,628.31 பணிக்கொடைக்கான ஒதுக்கீடானது நிறுத்திவைத்த இலாபத்திற்கான செம்மையாக்கல்களாக | பணிக்கொடை செலவுகள் தொடர்பாக பிழையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களை |

| | | | |
|---|---|---|---|
| | பணிக்கொடை செலவுகள் ரூபா 34,585,689 ஆல் குறைத்து அறிக்கையிடப்பட்டிருந்தது. | சரிசெய்யப்பட வேண்டியதுடன் அப்பெறுமதியை மாத்திரம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அடையாளங்கண்டு அதன் மூலம் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள கணக்கு மீதிகளை சரிசெய்தல் வேண்டும். |
| (ஓ) | முன்னைய ஆண்டின் போது கொள்வனவு செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாதிருந்த ரூபா 2,493,635 பெறுமதியான கெல்வனைஸ் குழாய்களின் இருப்பினை மூலதனமாக்கிய தவறினை சரிசெய்யும் போது அதன் முழுக் கிரயமும் முன்னைய ஆண்டின் செலவாக பிழையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்த இருப்பு நிர்மாண வேலைகளுக்காக பயன்படுத்தாதிருந்ததன் காரணமாக நிறுத்திவைத்த உழைப்புக்கள் மற்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகள் அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கெல்வனைஸ் குழாய் இருப்புக்கள் முன்னைய ஆண்டு தொடர்பாக சரியாக செம்மையாக்கப்பட்டுள்ளது. அக்குழாய் இருப்புக்கள் நடைமுறைச் சொத்துக்களாக 2025-12-31 ஆந் தகிதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாத கெல்வனைஸ் குழாய் இருப்புக்கள் சரியாக நடைமுறைச் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விழரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தின் நிதியை பயன்படுத்தி ஊழியர்களுக்கு ஒரு வீடமைப்புக் கடன் திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 06 ஊழியர்களிடமிருந்து ரூபா 3,385,312 வீடமைப்பு கடன் மீதி அறவிடப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் உரிய வீடமைப்பு கடன் திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பந்தியின் (ஊ) உப பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க ஊழியர் நலன்புரி வசதிகளின் கீழ் இக்கடன் திட்டத்தினை நிறுவனத்தின் நிருவாக சபை அங்கீகரித்துள்ளதுடன் கடன் பணம் தவணை ரீதியாக அறவிடப்படுகின்றது. | உரிய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அங்கீகரித்த ஒரு நிதியத்தினை உருவாக்கி நலன்புரி வசதிகளை அமுல்ப்படுத்த வேண்டியதுடன் பொதுத்திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்று கடன் திட்டம் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி நிறுவன அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பந்தியின் (ஊ) உப பிரிவிற்கு இணக்கமற்றவகையில் ஒரு நலன்புரி நிதியத்தினை | 1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி நிறுவன அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பந்தியின் (ஊ) உப பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க அங்கீகரித்த நலன்புரி |

| | | | |
|---|---|---|---|
| | ஸ்தாபிக்காது 62 உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களுக்கு மாதாந்த வாடகை அறவிடப்படாது அரசாங்கத்தின் வீடுகள் வழங்கப்பட்டிருந்தன. மேலும் அந்த வீடுகளுக்கு நீர் மானி பொருத்தப்படாததுடன் நிறுவனத்தின் பிரதான நீர் வழங்கலின் மூலம் அந்த வீடுகளுக்கு நீர் வழங்கப்பட்டு உரிய தனிப்பட்ட நீர்ப் பட்டில்கள் திறைசேரி நிதியின் மூலம் தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது அந்த வீடுகளின் மின்சார கட்டணத்திற்காக ரூபா 1,037,236 திசைசேரி நிதி செலவு செய்யப்பட்டிருந்தது. | அதரிகாரத்திற்கு இணங்க நிருவாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த மின்சாரம் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான அலகுகள் அறவீடு செய்யப்படாது ஊழியர் நலன்புரியினை குறிக்கோளாகக் கொண்டு வழங்கப்பட்டது. | நிதியத்தினை ஸ்தாபித்து அந்த நிதியத்தினூடாக அங்கீகரித்த நலன்புரி வசதிகள் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (இ) | ஆளணியினருக்கு கடன் வசதிகளை வழங்குவதற்காக ஒரு ஆளணியினர சுழற்சி கடன் நிதியத்தினை தோற்றுவித்து அதற்காக ஒரு அரசாங்க வங்கியில் ஒரு சேமிப்புக் கணிக்கும் ஒரு நடைமுறை கணக்கும் திறக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அந்த வங்கி கணக்குகளில் ரூபா 4,564,462 மொத்த மீதி காணப்பட்டதுடன் உரிய கடன் நிதியத்தினை தோற்றுவித்தல், அதற்காக திறைசேரி நிதியத்தினை ஈடுபடுத்துதல், வங்கி கணக்குகளை திறத்தல் என்பவற்றிற்காக தேவையான முறைப்படியான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆளணியினருக்கு கடன் வழங்குவதற்காக ஒரு கடன் நிதியத்தினை தோற்றுவித்து அதன் மூலம் கடன் பணத்தை வழங்குவதற்காக உடவளவ மக்கள் வங்கியில் ஒரு நடைமுறைக் கணக்கினையும் சேமிப்புக் கணக்கினையும் ஆரம்பிப்பதற்கு 2007 மே மாதம் 28 ஆந் திகதி நடைபெற்ற நிருவாக சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. | பொதுத்திறை சேரியின் அங்கீகாரத்தினைப் பெற்று உரிய கடன் திட்டம் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 04 சீனி உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 6,319,136 தொகையை 02 ஆண்டுகளிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு தொடர்ச்சியாக ஞாபகப்படுத்தல் கடிதங்கள் வழங்கப்படுகின்றது. வரிசை அமைச்சின் மூலமும் உரிய பணத்தை துரிதமாக | செயற்பாடற்ற கடன் மீதிகளை துரிதமாக அறவீடு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | தீர்த்துவைக்குமாறு மேலே காட்டப்பட்டுள்ள சீனிக் கம்பனிகளுக்கு தெரியப்படுத்தி கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 55,327,592 பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 36,221,723 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 19,105,869 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கான வருமானத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வருமானம் குறைவடைதல் இப்பற்றாக்குறைக்கு பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கந்தளாய் சீனித் தொழிற்சாலையினை ஆரம்பிக்கும் குறிக்கோளில் அதற்கு தேவையான விதை கரும்புகளை வழங்குதல் மற்றும் பிரதேசத்திற்குப் பொருத்தமான கரும்பு இனங்களை தெரிவுசெய்தலினை உள்ளடக்கி ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக வசதிகளை வழங்கும் குறிக்கோளில் 2011 ஆம் ஆண்டின் போது கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் காணிகளில் 400 ஏக்கர் அளவானவை மற்றும் 13 கட்டிடங்கள். கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நடவடிக்கைகளுக்காக நிறுவனத்தினால் 15 நபர்களைக் கொண்ட ஒரு ஆளணி இணைத்துக்கொள்ளப்பட்டு 2011 ஆம் ஆண்டிலிருந்து 2025 ஆம் ஆண்டு வரையான 14 ஆண்டுகள் காலத்தில் மீண்டுவரும் மற்றும் மூலதன செலவுகளாக ரூபா 157.1 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் கந்தளாய் சீனித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படாமையின் காரணமாக அச்செலவுகளின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | அந்த நிலையத்தினை மூடுவதற்குத் தேவையான அங்கீகாரத்தினை வேண்டி அமைச்சிடம் எழுத்துமூலம் வேண்டுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இந்த நிலையத்தினை தொடர்ந்தும் செயற்படுத்தும் தேவையப்பாடு மற்றும் அதன் செயலாற்றல் தொடர்பாக மீண்டும் மீளாய்வு செய்து அதில் காணப்படுகின்ற சொத்துக்களை வினைத்திறனாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்துவதற்கு அல்லது மாற்று பயனுள்ள செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 அடையாளங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டு தொடர்பான மருத்துவ உதவிப் படிகளின் உச்ச எல்லையினை முழுமையாக பயன்படுத்தியிருந்த 84 உத்தியோகத்தர்களுக்கு அந்த ஆண்டு தொடர்பான மருத்துவ விலைப்பட்டியல்களுக்காக மீளாய்வாண்டின் போது 1,714,438 பணம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க உரிய உத்தியோகத்தர்களுக்கு அங்கீகரித்த மருத்துவ உதவி எல்லையை மிகைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.` | மருத்துவ உதவி விலைப்பட்டியல்களை மீளளிப்புச் செய்யும் ஒரு நிபந்தனையாவது ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்கப்படுகின்ற விலைப்பட்டியல்களுக்காக கொடுப்பனவு செய்தல் இக்கொடுப்பனவு செய்தல் அடுத்துவரும் 02 ஆண்டுகள் காலத்திற்கு சட்டரீதியானது என முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தொடக்க மீதி எஞ்சியிருக்காத விலைப்பட்டியல்களுக்காக 2025 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | காப்புறுதி திட்டம் சம்பந்தமாக திறைசேரியின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 08 உத்தியோகத்தர்களுக்கு முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட மருத்துவ படி மீதியினை மிகைத்து முன்னைய ஆண்டு தொடர்பான விலைப்பட்டியல்களை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது ரூபா 145,484 பணம் மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவ உதவி விலைப்பட்டியல்களை மீளளிப்புச் செய்யும் போது கடந்த 02 ஆண்டுகளுக்கான மீதிகளிலிருந்து மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யலாம் என்பதற்கான ஒரு நிபந்தனை காணப்படுவதனால் அதற்கிணங்க இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | காப்புறுதி திட்டம் சம்பந்தமாக திறைசேரியின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது தேங்காய் விளைச்சலினை அறுவடை செய்யும் வருமானம் ஒரு தென்னை தொடர்பாக மாத்திரம் அறிக்கையிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க அறிக்கையிடப்படாத 03 தென்னைகள் தொடர்பாக ஆகக் குறைந்தது 6000 தேங்காய்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 780,000 அளவிலான வருமானம் (தென்னை அபிவிருத்தி அதிகாரசபையினால் | இத்தென்னை மரங்கள் வணிக ரீதியாக பராமரிக்கப்படவில்லை. தென்னை மரங்கள் வண்டுகளின் பாதிப்பிற்கு உள்ளாகுதல் பசளை/ கிருமிநாசினி பயன்படுத்தப்படாமை என்பவற்றின் காரணமாக | அரசாங்கத்தின் சொத்துக்கள் மற்றும் அவற்றிலிருந்து கிடைக்கும் விளைச்சலினை முறைப்படியாக அறிக்கையிட்டு அவற்றினை ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனாகவும் |

| | | |
|---|---|---|
| வெளியிடப்பட்ட விலைகளை அடிப்படையாகக் கொண்டு) அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் போது அறுவடை செய்யப்பட்ட 2,535 தேங்காய்களை முறையான பெறுகை நடைமுறைகளின்றி ஒரு தேங்காய் ரூபா 15 வீதம் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கியதன் காரணமாக ரூபா 329,550 வருமான இழப்பு இடம்பெற்றிருந்தது. | தேங்காய்கள் மிகவும் சிறியவையாக இருந்ததனால் சந்தையில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. விளைச்சலினை ஊழியர் நலன்புரி நடவடிக்கையாக கருதி ஊழியர்களுக்கு மத்தியில் ரூபா 15 பெயரளவு பெறுமதிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆண்டிற்கு 04 தென்னைகள் அறுவடையை பெற்றுக்கொள்ளும் அளவிற்கு விளைச்சல் இல்லாததனால் 2025 ஆகஸ்ட் மாதத்தில் மாத்திரம் தேங்காய் விளைச்சலினை அறுவடை செய்தல் மேற்கொள்ளப்பட்டது. | முகாமைத்துவம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தின் நிருவாக சபையை நியமிப்பதிலுள்ள தாமதத்தின் காரணமாக மீளாய்வாண்டிற்கு நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களுக்கு நிதி அதிகாரத்தினை ஒப்படைத்தல் மீளாய்வாண்டின் யூன் 16 ஆந் திகதி வரை தாமதமடைந்திருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் சனவரி 01 ஆந் திகதியிலிருந்து யூன் 15 ஆந் திகதி வரையான காலத்தில் முறையாக அதிகாரம் ஒப்படைக்கப்படாது நிதி நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 2025 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் நிருவாக சபை நியமிக்கப்படாததன் காரணமாக நிருவாக நடவடிக்கைகளை முறைப்படியாக செயற்படுத்துவதற்கு அதிகாரத்தினை ஒப்படைத்தல் தொடர்பான அங்கீகாரம் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சிடம் 2024 திசெம்பர் 19 ஆந் திகதி வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளது. 2025 மே மாதம் இறுதியில் நிருவக சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்கிணங்க நிதி அதிகாரம் | கணக்காண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களுக்கு முறைப்படியாக நிதி அதிகாரத்தினை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்படைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய ஆண்டின் பணிப்பாளர் சபைக் கூட்ட அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 15,586,298 நிலுவையான செஸ் வரிப் பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக நிருவாக சபையினால் போதிய நடவடிக்கைகள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய செஸ் வரிப் பணத்தை அறவீடு செய்வதற்கு தொடர்ச்சியாக ஞாபகப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. வரிசை அமைச்சின் மூலமும் உரிய பணத்தை துரிதமாக தீர்த்துவைக்குமாறு சீனிக் கம்பனிகளுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவையான செஸ் வரிப் பணத்தை அறவீடு செய்யவதற்கு நிருவாக சபையினால் போதியளவு நடவடிக்கைகளை தீர்மானித்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிறுவனத்தினால் முன்னைய ஆண்டுகளின் போது உற்பத்தி நடவடிக்கைகள் முடிவு செய்யப்பட்ட ஒரு பயிர் ஊட்டச்சத்து (பசளைகள்) உற்பத்தி மற்றும் 05 கிருமிநாசினி உற்பத்திகளுக்காக ஆக்கவுரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த புதிய உற்பத்திகளுக்கான ஆக்கவுரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது நிறுவனத்தின் வணிகம் தொடர்பான பிரிவின் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதனால் அதனூடாக இடம்பெற்று வந்த ஆக்கவுரிமைகளை பெற்றுக்கொள்ளும் நடைமுறையும் தற்பொழுது தடைப்பட்டுள்ளது. | உற்பத்திக்காக ஆக்கவுரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறையை துரிதப்படுத்தி அவற்றின் புலமைச் சொத்து உரிமையை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 நிதிகளின் குறைந்த பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான ரூபா 40 மில்லியன் மூலதன மானியம் பாதீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 24 மில்லியன் மாத்திரம் 2025 நவம்பர் மாதத்தின் போது கிடைத்திருந்தது. அதன் மூலம் திட்டமிடப்பட்ட மூலதனச் செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கு போதியளவு காலம் கிடைக்காமையின் காரணமாக கிடைத்த நிதி ஏற்பாட்டில் | நிருவாக சபையினை நியமிப்பது தாமதமடைதல், பெறுகை நடவடிக்கைகள் தாமதமடைதல், மூலதன நிதி ஏற்பாடு 2025 நவம்பர் மாதம் வரை தாமதமடைதல் என்பன இதற்கான காரணமாக | செலவு செய்வதற்கு போதியளவு காலம் கிடைக்கும் வகையில் கட்டுநிதியினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 12,905,803 அல்லது 54 சதவீதம் செலவு செய்யப்படாது திறைசேரிக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. | இருந்தது. | |

**3.6 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை 30 நிர்மாண வேலைகளுக்காக வெளித்தரப்பினர்களுக்கு கட்டணம் செலுத்தி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. அவற்றிற்கு மத்தியில் 2021 ஆம் ஆண்டில் மஹவெலி அதிகாரசபையின் கடித தலைப்பினை பயன்படுத்தி இரண்டு நிர்மாண வேலைகளுக்காக மொத்தமாக ரூபா 24,411,265 தொகைக்கு மதிப்பீடுகளைத் தயாரித்து சமர்ப்பித்த மஹவெலி அதிகாரசபையின் ஒரு உத்தியோகத்தருக்கு மதிப்பீட்டினைத் தயாரிக்கும் கட்டணமாக ரூபா 976,425 தொகை அவரின் தனிப்பட்ட கணக்கிற்கு வரவு வைக்கப்படும் வகையில் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த இரண்டு மதிப்பீடுகளும் தொடர்பான நிர்மாண நடவடிக்கைகள் 2026 மார்ச் 13 அந் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இன்னும் 20 நிர்மாண வேலைகளுக்காக இரண்டு வெளி நபர்கள் மற்றும் ஒரு நிறுவனத்திடமிருந்து மொத்தமாக ரூபா 33,704,917 மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதற்காக ரூபா 621,456 செலுத்தப்பட்டிருந்தும் அக்கட்டணத்தை செலுத்தும் அடிப்படை மற்றும் அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | ரூபா 976,425 பணம் அவரின் தனிப்பட்ட கணக்கிற்கு செலுத்தப்பட்டுள்ளது என்ற கணக்காய்வு அவதானிப்பினை அடிப்படையாகக் கொண்டு அடையாளம் காணப்பட்டதன் பின்னர் அப்பணம் மஹவெலி அதிகாரசபையினால் மீள அறவீடு செய்யப்பட்டுள்ளது. தெனியாய உப நிலையத்தின் காணி சம்பந்தமாக பிரச்சினைகள் காணப்படுவதனால் அனைத்து நிர்மாண நடவடிக்கைகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. 02 பதிவு செய்தல் சேவை வழங்குனர்களிடமிருந்து உரிய பொறியியல் சேவைகளை நேரடியாகப் பெற்று அதற்காக செலுத்த வேண்டிய பணம் பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | முறையான அங்கீகாரமின்றி வெளி நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் அரசாங்க நிதியை செலுத்துவது சம்பந்தமாக பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் சம்பந்தமாக விசாரணைகளை நடாத்தி அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | தெனியாய விதைக் கரும்பு இனவிருத்தி நிலையத்தின் நுழைவுப் பாதை, மதில் சுவர், கேட் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக 15 வேலை விடயங்களை உள்ளடக்கி ரூபா 1,285,930 மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் | ஒப்பந்தத்தின் தொடக்க பாதீட்டில் அறவிடப்படாத மிகவும் அத்தியவசியமான வேலைகளை மேற்கொள்வதற்காக அப்போதைய நிறுவனத்தின் | முறையான அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகள் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய |

| | | |
|---|---|---|
| மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்காக ஒரு வெளிநபருக்கு ரூபா 19,289 கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அங்கீகரித்த மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்படாத 09 வேலை விடயங்களுக்காக முறையான அங்கீகாரமின்றி ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 1,041,165 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் அங்கீகரிக்கப்பட்ட விலைப்பட்டியல்களைப் பயன்படுத்தாது 02 வேலைகளுக்காக ரூபா 263,603 மிகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த மேலதிக வேலைகளுக்காக மேற்கொண்ட கொடுப்பனவில் ஏனைய நிர்மாண வேலைகள் தொடர்பான 03 வேலை விடயங்களுக்காக மேற்கொண்ட ரூபா 51,000 கொடுப்பனவும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்கள் வெளிக்கள பரீட்சிப்பினை மேற்கொண்டு உரிய வேலைகளை அந்த ஒப்பந்தக்காரரின் மூலமே மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஏனைய சிவில் பொறியியலாளரினால் அந்த வேலைக்காக ரூபா1,492,466 தொகை சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. பின்னர் பிரதேச செயலகத்தின் ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் சிபாரிசு செய்த விலைகளுக்கு இணங்க நிருவாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 1,041,165 பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொடக்க ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாதிருந்த 03 வேலைகளுக்காக ரூபா 51,688 பணம் தொழில்நுட்ப பெறுகைக் குழுவின் சிபாரிசு மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மிகையாக செலுத்தியுள்ள பணம் சம்பந்தமாக பொறுப்பினைத் தீர்மானித்து அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நிதி நட்டத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.7 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பணிப்பாளர் (பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்) பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்) ஆகிய பதவிகள் கடந்த ஆண்டிலிருந்தும் பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம்) பதவி 2020 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவவாறு பணிப்பாளர் (பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்) பதவி, பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்) ஆகிய | நிறுவனத்தின் செயலாற்றல் மற்றும் செயற்திறனுக்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்ற அத்தியவசியமான பதவிகளை |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டிலிருந்தும் வெற்றிட்மாகக் காணப்பட்டதுடன் பிரதான தொழில்நுட்ப பரிமாற்றல் உத்தியோகத்தர், 05 பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள், சிரேஷ்ட தொழில்நுட்ப பரிமாற்றல் உத்தியோகத்தர் பதவி ஆகிய 10 பதவிகள் உள்ளடங்கலாக 80 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. | பதவிகள் கடந்த ஆண்டிலிருந்தும் பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம்) பதவி 2020 ஆம் ஆண்டிலிருந்தும் பிரதான தொழில்நுடம்ப பரிமாற்றல் உத்தியோகத்தர் பதவி, 05 பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள், சிரேஷ்ட தொழில்நுட்ப பரிமாற்றல் உத்தியோகத்தர் பதவி ஆகிய 10 பதவிகள் உள்ளடங்கலாக 80 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | அடையாளம்கண்டு அப்பதவிகளை துரிதமாக நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |